STC.No.300/2025 DW3.திருமதி.சுகுணா

தேதி– 24.08.2026

புகார்தாரர் ஆஜர்

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகார்தாரர் எனக்கு அறிமுகமான நபர் என்றால் சரிதான். செந்தில்குமார் மூலம் அவரை எனக்கு தெரியும். செந்தில்குமாருக்கும், புகாதாரருக்கும் வரவு செலவு இருந்ததா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். செந்தில்குமாருக்கும், புகாதாரருக்கும் இருந்த வரவு செலவு அடிப்படையில் செந்தில்குமார் புகார்தாரருக்கு ஜிபே மூலம் அனுப்பிய தொகையை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு தனியாக ஜிபே கணக்க உள்ளது என்றால் சரிதான். காசோலை வசூலுக்கு தாக்கல் செய்த பின்பு நான் புகார்தாரர் மீது மதுரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை, 16.07.2025 நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு தான் காசோலையை அவர் வசூலுக்கு தாக்கல் செய்தார். காசோலையில் ஒரு லட்சம் என்று என்னால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் காசோலையை வைத்து நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்துக் கொள்வதாக புகார்தாரர் கூறியுள்ளார் என்றால் சரிதான்.

2. எனது கணவர் என்ன வேலை செய்தார் என்றால் காவல் நிலையத்தில் துணை கண்காணிப்பாளராக இருந்தார். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஏ படித்துள்ளேன். சுடர் டிரேடர்ஸ் என்ற பெயரில் நான் நிறுவனம் நடத்தினேன் என்றால் முன்பு நடத்தினேன். எனக்கு வங்கி பரிவர்த்தனைகளை பற்றி நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவில் மாதம் மாதம் புகார்தாரருக்கு 5000 ஜிபே மூலம் அனுப்பினேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் 11 மாதம் 5000 வீதம் 55,000 ஜிபே மூலம் செலுத்தியதாக புகார் மனுவில் குறிப்பிட்டேன் என்றால் சரிதான். எனது கம்பெனியில் வைத்து 45,000 செந்தில் என்பவர் முன்னிலையில் புகார்தாரரிடம் கொடுத்ததாக புகார் மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3. நான் தாக்கல் செய்த புகார் மனுவில் கூறியுள்ளவாறு எந்த சம்பவம்

நடைபெறவில்லை என்றும், புகார்தாரரிடம் பெற்ற தொகையை ஏமாற்ற வேண்டும் என்று பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் புகார் மனுவில் 55000 ஜிபே மூலம் செலுத்தியதாக கூறிவிட்டு நீதிமன்ற விசாரணையில் 60,000 செந்தில்குமார் மூலம் செலுத்தியதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எ.சா.ஆ.3 எனது நிறுவனத்தில் வைத்து 45,000 கொடுத்ததாக கூறிவிட்டு நீதிமன்ற சாட்சியத்தில் மதுரை சுந்தரம் பார்க் அருகே வைத்து 40,000 கொடுத்ததாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் மொத்த தொகையும் நான் கொடுத்து விட்டேன். நான் காசோலையின்படி தொகையை புகார்தாரருக்கு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் அவரை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.24 02:46:34 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam